செ.வெ.எண்:- 506 நாள் 4-08.11

## பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு கால்நடை பராமரிப்பு மற்றும் பால்வளத்துறை அமைச்சர் அவர்களின் ஆய்வுக் கூட்டம்
நாள் : **02.08.2011**

**********

# நடமாடும் கால்நடை மருந்தகங்களின் செயல்பாடுகளை இன்னும் சிறப்பாக நடைமுறைப்படுத்த வேண்டும்

**கால்நடைத்துறை அமைச்சர் மாண்புமிகு என்.ஆர்.சிவபதி அறிவுறுத்தல்.**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அவர்கள் இன்று **(02.08.2011)** தேனாம்பேட்டையிலுள்ள கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் இயக்ககத்தில் நடைபெற்ற கால்நடை பராமரிப்புத் துறையின் மண்டல இணை இயக்குநர்கள் மற்றும் உதவி இயக்குநர்கள். கலந்து கொண்ட ஆய்வுக் கூட்டத்தில் கலந்து கொண்டு ஆய்வு செய்தார். இக்கூட்டத்திற்கு, கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை அரசுச் செயலர் திரு ககன்தீப்சிங் பேடி, இஆப., கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப்பணிகள் இயக்குநர் திரு இரா.பழனிசாமி, இ.ஆ.ப., மற்றும் துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்கள் தேர்தல் அறிக்கையில் அறிவித்த அரிய திட்டங்களான கறவை மாடுகள் மற்றும் இலவச வெள்ளாடு / செம்மறி ஆடுகள் வழங்கும் திட்டத்தினை செம்மையான முறையில்

நடைமுறைப்படுத்திடவும், இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அரசாணையில் குறிப்பிடப்பட்டுள்ள நெறிமுறைகளை பின்பற்றி தகுதி வாய்ந்த பயனாளிகளைத் தேர்வு செய்து அவர்கள் முழுமையாக பயன்பெறும் வகையில் செயல்படுத்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு ஆலோசனைகள் வழங்கினார். இதன் மூலம் தமிழ்நாட்டில் பால் உற்பத்தியை உயர்த்த வேண்டும், ஏழை எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தினை முன்னேற்ற வேண்டும் என்ற மாண்புமிகு தமிழக முதல்வர் இதயதெய்வம் புரட்சித்தலைவி அம்மா அவர்களின் உயர்ந்த திட்டங்களை செவ்வனே செயலாக்க துறை அலுவலர்கள் நல்ல முறையில் பணியாற்ற வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறை அலுவலர்களை கேட்டுக் கொண்டார்.

துறையின் பணிகளை விரிவாக ஆய்வு செய்த மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நடமாடும் கால்நடை மருந்தகங்களின் செயல்பாடுகளை இன்னும் சிறப்பான முறையில் நடைமுறைப்படுத்த வேண்டும் எனவும், இத்தகைய நடமாடும் கால்நடை மருந்தகங்கள் மூலம் தொலைதூரங்களில் உள்ள கிராமங்களில் பராமரிக்கப்படும் கால்நடைகளுக்கும் உரிய மருத்துவ சேவை சென்று அடையும் எனவும், இதனால் கால்நடை வளர்க்கும் விவசாயிகள் மிகுந்த அளவில் பயனடைய இயலும் எனவும் தெரிவித்தார். நடமாடும் கால்நடை மருந்தகங்களுக்குத் தேவைப்படும் அனைத்து உள்ளீடுகளையும்,

கட்டமைப்பு மற்றும் வாகனங்கள் ஆகியவற்றையும் வழங்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

கால்நடை வளர்ப்போருக்கு மிகுந்த பொருளாதார இழப்பினை ஏற்படுத்தும் நோய்களை தடுக்கும் முக்கியமான நடவடிக்கையாக குடற்புழு நீக்கம் மற்றும் இராணிகட் உள்ளிட்ட தடுப்பூசிபோடும் பணிகளை அனைத்து கால்நடைகளுக்கும் கிடைக்கும் வகையில் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என மாண்புமிகு அமைச்சர் அவர்கள் துறை அலுவலர்களை அறிவுறுத்தினார். இதற்குத் தேவைப்படும் தடுப்பு மருந்துகளை தடையின்றி அனைத்து கால்நடை நிலையங்களுக்கும் வழங்கிட தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ள மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார்.

மேலும், தனது துறை சார்ந்த அரசின் அனைத்து திட்டங்களையும் முழுமையாக அமல்படுத்த அறிவுரை வழங்கினார்.

கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சரின்
முதுநிலை நேர்முக உதவியாளர்
தலைமைச் செயலகம், சென்னை-600 009